உ

ஸ்ரீ வாணீசகாயம்.

புதுவைக் கலைமகள் கழகத்தின்

நான்காவது ஆண்டு

அறிக்கைப் பத்திரம்.

1915.

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

புதுவைக் கலைமகள் கழகத்தின்

நான்காவது ஆண்டு அறிக்கைப் பத்திரம்.

1915.

வேண்பா.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலு மனவாத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

கழகத்தின் இருப்பிடம்.

கலைமகள் கழகம் என்னும் இச் சபையானது விரோதி கிருது ஸ்ரீ சித்திரை மீ 1-ம் உ குருவாரத்தன்று தாபிக்கப் பெற்று, புதுவை வேளாளர் வீதி, 4-ம் நெ. கிருகத்தை இடமாகப் பெற்றுள்ளது.

கழகத்தின் நோக்கங்கள்.

தமிழ் நூற்களை ஆராய்வதாலும், பிரசங்கங்கள் செய்வதனாலும், பத்திரிகை முதலியன பிரசுரிப்பதனாலும் தமிழ்ப் பாஷையை அபிவிருத்தி செய்வதே இக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

நிர்வாக சபையார்.

அக்கிராசனாதிபதி,

ஸ்ரீமான் பு. அ. பெரியசாமிப்பிள்ளை.

உதவி அக்கிராசனாதிபதி,

,, சி. பங்காருப்பத்தர்.

காரியதரிசி,

,, தி. திருப்புளிசாமி ஐயர்.

உதவி காரியதரிசி,

,, பொ. கிருஷ்ணசாமி நாயகர்.

தனரக்ஷகர்,

,, சு. அண்ணாமலை முதலியார்.

கணித பரிசோதகர்,

,, இராகவ. திருவேங்கட ஐயர்.

பரிபாலன பிரதிநிதிகள்,

,, கோ. தியாகராஜ முதலியார்.
,, சேஷ. சடகோப ஐயர்.
,, அ. நாராயணசாமி முதலியார்.
,, து. வேணுகோபாலப்பிள்ளை.
,, சு. அ. சுப்பராயப்பிள்ளை.
,, அ. பாலகிருஷ்ண நாயடு.

கௌரவ சபாநாயகர்,

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.

கௌரவ சமாஜிகர்,

ஸ்ரீமான் கிரந்தே, சிவசங்கர செட்டியார்
,, கோட்டக்கரை, அரங்கசாமி செட்டியார்.

அங்கத்தவர்கள்,

,, தெ. முத்துக்குமாரசாமி முதலியார்.
,, பொ. வேங்கடாசல நாயகர்.
,, சா. சடையப்பிள்ளை.
,, மா. பெரியசாமி நாயகர்.
,, வே. கிருஷ்ணசாமிப்பிள்ளை.
,, எல்லப்ப. துரைசாமி நாயகர்.
,, சி. சிவசச்சிதாநந்த செட்டியார்.
,, கு. சிவகுருநாதப்பிள்ளை.
,, ச. மாணிக்கப்பத்தர்.
,, ஸ்ரீநிவாச அரங்கசாமி முதலியார்.
,, வே. இராகவப்பிள்ளை.
,, மு. இராசுப்பிள்ளை.
,, மு. பழநிசாமி செட்டியார்.

நடைபெற்ற செயல்கள்.

(1. இலக்கிய இலக்கண ஆராய்ச்சி.)

பிரதி வியாழக்கிழமைதோறும் இலக்கிய இலக்கணங்கள் ஆராயப்பட்டும், ஞாயிற்றுக்கிழமைதோறும் உபந்நியாசங்கள் செய்யப்பட்டும் வருகின்றன. அன்றியும், சுதேசமித்திரன், சென்னை விவேகபோதினி, பூரண சந்திரோதயம், கிருஷிகன், ஹிதகாரிணி, பெண்கல்வி, தமிழன், சக்காவர்த்தினி, விசுவ கர்ம குலோபகாரி, சித்தாந்தம், விசுவகர்மன், கலியுக வர்த்தமானி, கமலாசனி, சைவம், சுகாபிவர்த்தனி முதலிய பத்திரிகைகள் படிக்கப்பட்டும் வருகின்றன.

(2. கழகத்தார் வெளியிற் செய்த பிரசங்கங்கள்.)

உபந்நியாசகர்.	விஷயம்.	இடமும் காலமும்.	
ஸ்ரீமான் சி. பங்காருப்பத்தர்	"குருபக்தி."	வேலூர் சைவசித்தாந்த மகாசமாஜம்.	26 – 12 – 1913
,, ஷெயார்	"நற்சார்வு"	புதுவை ஸ்ரீ கிருஷ்ணவாசகசாலை.	10 – 5 – 1914
,, ஷெயார்	"பரோபகாரம்"	கூடலூர் சைவசித்தாந்த மகாசமாஜம்.	26 – 12 – 1914
,, தி. திருப்புளிசாமி ஐயர்	"அப்பூதியடிகள் மான்மியம்"	புதுவை, பகவத்கீத சன்மார்க்கசபை.	31 – 1 – 1915
,, சி. பங்காருப்பத்தர்	"குரு மகிமை"	புதுவை, பகவத்கீத சன்மார்க்க சபை.	31 – 1 – 1915
,, ஷெயார்	"நல்லோரிணக்கம்"	திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ சரஸ்வதி விலாச சபை.	27 – 3 – 1915
,, சு. அ. சுப்பராயப் பிள்ளை	"தெளிவு"	புதுவை, பகவத்கீத சன்மார்க்க சபை.	7 – 2 – 1915
,, சி. பங்காருப்பத்தர்	"உபகாரம்"	புதுவை ஸ்ரீ கிருஷ்ண வாசகசாலை.	2 – 4 – 1915
,, தி. திருப்புளிசாமி ஐயர்	"பொறுமை"	புதுவை ஸ்ரீ கிருஷ்ணவாசகசாலை.	3 – 4 – 1915
,, இராகவ – திருவேங் கட ஐயர்	"துருவசரித்திரம்"	புதுவை, பகவத்கீத சன்மார்க்க சபை.	18 – 4 – 1915

(3. கலைமகள்.)

1913-ம் ஆு ஜனவரி மீ முதற்கொண்டு இக் கழகத்தினின்று, "கலைமகள்" என்னும் பெயரிய ஓர் தமிழ்ப் பத்திரிகை மாதந்தோறும் பிரசுரமாய்க்கொண்டு வருகின்றது. சென்ற வருடத்தில் 306 சந்தாநேயர்களால் ஆதரிக்கப்பட்டு வந்த இப் பத்திரிகை இவ் வருடத்தில் 257 சந்தாநேயர்களால் ஆதரிக்கப் படுகின்றது. தமிழ் நாட்டில் தமிழ்ப் பத்திரிகைகளை ஆதரிப்பவர்கள் குறைந்துபோவதைப்பற்றி விசனிப்பதைவிட வேறு என்னசெய்யலாம்.

(4. புத்தக நிலையம்.)

இக் கழகத்தில் புத்தக நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இப் புத்தகசாலையில் தற்காலம் உள்ள புத்தகங்கள் 33.

புத்தகசாலைக்குப் புத்தகாலயம் (அலமாரி) நன்கொடையளித்தவர், புதுவை மளிகை ஸ்ரீமான் ஸ்ரீநிவாச-அரங்கசாமி முதலியார்.

புத்தகங்கள்.	நன்கொடையளித்தவர்கள்.
1. சிவரஹசியம். 2. தாயுமானசுவாமி பாடல் மெய்கண்ட விருத்தியுரை. 3. சீதா ராமாஞ்சநேய சம்வாதம். (தெலுங்கு.) 4. அத்துவித வெண்பா மூலமும் உரையும். 5. சேக்கிழார் பிள்ளைத்தமிழ். 6. தேவோபாசனு தீபம். 7. வீரசைவ வினவிடை.	திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.

8. மூவர் தேவாரம். 9. திருவருட்பா. 10. திருத்தணிகைப் பதிகம். 11. அகத்தியர் தேவாரத்திரட்டு. 12. பிரபுலிங்கலீலை மூலம்.	புதுவை மளிகை ஸ்ரீமான் ஸ்ரீநிவாச — அரங்கசாமி முதலியார்.
13. மொழி நூல்.	சென்னை ஸ்ரீமான் மாகறல் கார்த்திகேய முதலியார்.
14. தமிழ் அகராதி.	புதுவை ஜவளி ஸ்ரீமான் சு. அண்ணாமலை முதலியார்.
15. ரமணி.	புதுவை ஸ்ரீமான் சு. அ. சுப்பராயப்பிள்ளை.
16. ஆசார விளக்கம்.	திருவாரூர் ஸ்ரீமான் V. வைத்திநாதசுவாமி ஸ்தபதியார்.
17. சீவகசிந்தாமணி. 18. சிலப்பதிகாரம்.	காஞ்சீபுரம் ஸ்ரீமான் அ. ஷண்முக செட்டியார்.
19. கந்தபுராணம் வசனம். 20. பகவத்கீதை. 21. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்.	புதுவைக் குளத்துமேடு ஸ்ரீமான் வீரப்ப — சாமிநாதப் பிள்ளை.
22. வேதாந்த சூடாமணி மூலம். 23. ஊற்றுமலைத் தனிப் பாடற்றிரட்டு. 24. சிவஞான பாஷ்யம். 25. வாதவூரர் புராணம். 26. கரையேறவிட்ட நகர்ப்புராணம். 27. தேவாரப் பதிகங்கள்.	திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமான் அதிகப்ப வீ. சோமசுந்தர செட்டியார்.
28. நல்லாப்பிள்ளை பாரதம். 29. நியாயப் பிரகாசம்.	ஒட்டம்பாளயம் ஸ்ரீமான் கு. வேலாயுத செட்டியார்.
30. கந்தபுராணம். 31. திருவிளையாடற் புராணம். 32. பெரிய புராணம்.	புதுவை ஸ்ரீமான் திருமுடி நடராஜ செட்டியார்.
33. பன்னூற்றிரட்டு.	முருங்கப்பாக்கம் ஸ்ரீமான் நமசிவாயநாட்டார்.

கலைமகள் கழகத்தின் புத்தக நிலையத்திற்கு, புத்தகாலயம் (அலமாரி) நன்கொடையளித்த ஷெ ஸ்ரீமான் ஸ்ரீ நிவாச அரங்க சாமி முதலியாருடைய அன்புடைமையும், தாராள சிந்தையும் கொண்டாடத்தக்கன.

நமது கழகத்திற்குப் புத்தகங்கள் நன்கொடை யளித்தரு ளிய நமது ஸ்ரீ ஞானியார் மடாலயத்துச் சுவாமிகளுக்கும், மற் றைய அன்பர்களுக்கும் எமது நன்றியைச் செலுத்துகின்றோம்.

கழகத்திற்குப் புத்தகங்கள் இன்னும் பல வேண்டியிருப்ப தால் தங்களால் இயன்ற புத்தகங்கள் வாங்கி யுதவும்படி அன்பர் களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மூலதனம்.

இக் கழகம் என்றும் தளர்ச்சியுறாது நின்று நடைபெறுவ தற்கு மூலதனமிருப்பது ஆவசிகமன்றோ? ஆதலின், தமிழின் மாட்டு அபிமானமுள்ள ஒவ்வொருவரும் இக் கழகத்திற்கு மூல தனம் அமைக்கத் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்யு மாறு விநயவந்தன பூர்வகம் வேண்டுகின்றோம்.

வரவு செலவு கணக்கு.

வரவு ரூபா	106 – 0 – 12
செலவு ரூபா	69 – 0 – 9
இருப்பு ரூபா	37 – 0 – 3

செய்ந்நன்றி யறிதல்.

இந் நான்காவது ஆண்டுவிழாக் கொண்டாட்டத்திற்கு, எமக்குப் பெருந் துணையாய் நின்று பலவிதத்தும் உதவிபுரிந்த நமது கழகத்தின் சமாஜிகர்களாகிய புதுவை ஸ்ரீமான் கிரந்தே சிவசங்கர செட்டியாரவர்களுக்கும், புதுவை ஸ்ரீமான் தெ. முத் துக்குமரசாமி முதலியாரவர்களுக்கும் இக் கழகம் நன்றிசெலுத் தக் கடமைப்பட்டுள்ளது.

இங்ஙனம்

நிர்வாக சபையார்.

உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறநில்.

வெண்டாமரை ௩.] 1915-ம் ஆ ஜனவரி மீ [இதழ் க.

இலௌகிகப் பகுதி.

வாழ்த்துப் பாக்கள்.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் படாலயம்
ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய
சுவாமிகள் அருளியது.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தொடுகட லுலகிற் றோன்றிய வெவர்க்குந்
துணைசெயுங் கலைமக ணின்றன்
றடைதவிர் நடையின் றணியர் பலருஞ்
சார்ந்தனர் சாத்திர நுட்ப
மிடமக லுலக வியல்களு முணர்ந்தா
ரிலக்கண நிலைமையுந் தெரிந்தார்
மடனகன் றுய்வா னிலக்கியந் தேர்ந்தார்
மாதுநின் னன்றியார் செய்வார். (1)

இங்ஙன நன்றி புரிந்தருண் மாதே
யிணையிலா தோங்குக நாளும்
அங்கையி லயில்வேன் மயிலவ னருளா
லடைகுக மெய்த்திடு நலங்கள்
எங்குள னின்பக் கலைமக ளென்ன
வெழில்பெற நின்னையா தரிக்குங்
கங்கக லீறிஞர் திருவொடும் வாழ்க
கண்ணிய வளமெலாம் பெற்றே. (2)

மெய்வளம் பழுத்த நின்றனைப் பெற்ற
மேன்மைபங் காருநல் லறிஞர்
கைவளங் கொண்டு நின்முகந் தன்னைக்
கவினுறத் திருத்துநற் சீலர்
தெய்வநற் பத்தி மேலவ ரன்பு
சிறந்திடு மடக்கமே யுடையார்
செய்தவச் செல்வந் தேகநற் சுகமே
சிவணிவாழ்ந் திடுகவெந் நாளும். (3)

வேதாந்த பாஸ்கரர் கோயிலூர்

ஸ்ரீமத் வீர – சுப்பையசுவாமிகள் அருளியது.

விருத்தம்.

உலகுறு நெறியை யுயர்மறை நெறியை யுருவென வுடையபே ரொளியே
கலகுறு முயிரை நல்வழி நடத்திக் காத்தருள் புரிகலை மகளே
திலகநன் னீயு நின்வயிற் பிரியஞ் செறிதரும் பத்தருந் திகணீ
யலகுற வளரப் பொருடரு மறிஞ ரகிலரும் வாழிநீ டூழி.

திருவருணை, செந்தமிழ்க்கவி

ப்ரம்மஸ்ரீ K. V. இராமசந்திர ஐயரவர்கள் அருளியது.

சந்த விருத்தம்.

கலைமக ளுலவிய புதுவையி லெழுமொளிர் கலைமக ளேனுமொரு கனமா
நிலைபெற முலகினி லுனதருளலதொரு நிமிடமு முயிராது தரியாதே [தே

மலைவளை பசுபதி சிலைமிதி பதவரி மலருறை பதியவ னுருவானுய்
அலையெறி கடலுல கதனொடு மமரரி னருமுல கதுவரை யறிவாயே.

வெண்பா.

பத்தர் வளர்புதுவைப் பீண்டிதராம் பங்காருப்
பத்தருல குக்குதவி பண்ணினர்—மெத்தக்
கலைமகளாம் புத்தமுதைக் கூசிவியீ ருண்டு
நிலைபெறவே யென்ஞான்று நின்று.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

அருமறைக் கடலை யேந்தி யவனியுண் மனிதப் பைங்கூழ்
திருவருள் சிறக்க வெண்ணுஞ் சீர்க்கலை மகளேன் கொண்டல்
பெருவருள் சொரிந்து வாழ்க பெட்புட னதைக டாத்தும்
வருகவி வலன்பங் காருப் பத்தரும் வாழ்க மாதோ.

மூன்றும் வருடத்துக் கலைமகள்.

ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

ஆன்றோர் அநுக்கிரக விசேடத்தால், புதுவைக் கலைமகள் கழகத்திற்றோன்றிய நமது கலைமகள், கலையிற்பெரிய புலவர்களானும், சந்தாநேயர்களானும், மற்றைய அன்பர்களானும் அன்போடு வளர்க்கப்பெற்று, யாதொரு குறையுமின்றி, சென்ற டிசம்பர் மாதத்தோடு தனது இரண்டாம் வயது நிரம்பப்பெற்றனள்.

ஆதலின், சென்றவருடத்தில், நம் செல்வக் கலைமகள், சிறிதுங்குன்றுது நின்று நிலவுமாறு ஆசிகூறி விஷயதானமும் செய்தருளிய பெரியோர்களை வணங்குகின்றேம்.

அரிய பெரிய விடயங்களென்னும் அணிகள் பலவற்றைக் கலைமகட்கு ஒளிபெறப்புனைந்து உபகரித்த கல்வியிற்பெரிய செல்வர்களுக்கும் நன்றி செலுத்துகின்றேம்.

கலைமகள் செல்வியைக் கரத்திலேந்தி, இன்பநுகர்ந்து அன்பு மிகுந்து, கைப்பொருள் தன்னால் கனிவொடு வளர்த்த சந்தாநேயர்களுக்கும், கலைமகள் வளர்ச்சியைக் கருதிய மற்றைய அன்பர்களுக்கும் நன்றிசெலுத்தும் நற்கடன் பூண்டுளேம்.

இப்புதுவையில் அரிதிற்றோன்றிய இக் கலைமகளேனும் நிலைபெறல்வேண்டும் என்னும் நல்லெண்ணங்கொண்டு, யாம் கேட்கு முன்னரே அன்புகூர்ந்து தமது சந்தாவைத் தாமே செலுத்தி எம்மை உற்சாகப் படுத்திய உத்தமர்களுக்கும் எமது வந்தனத்தைச் செலுத்துகின்றேம்.

குற்றங்குறைந்த பெரியோர்கள், கற்றுத் தெளிந்த புலவர்கள் முதலியவர்களது திருவுருவப்படங்களையும் சரிதங்களையும் மாதந்தோறும் கலைமகள் சுமந்து கவின்பெறவேண்டும் என்னும் கருத்துக்கொண்டு, அங்ஙனமே சென்றவருடத்தில் சில பெரியோர்களது படங்களையும் சரிதங்களையும், தமது அரிய முயற்சியால், கலைமகள் புனைந்து கதிக்கச்செய்து, இவ்வருடத்திலும் அவ்வண்ணமே கலைமகள் வெளிவரல் வேண்டுமென்று முயன்று கொண்டிருக்கும் திருவெண்ணெய்நல்லூர், கம்பர் கலாமிர்த சங்கக் காரியதரிசி, செந்தமிழ்க்கவி ஸ்ரீமான் தி. வடிவேலுமுதலியார் அவர்களது அன்புடைமை பெரிதும் பாராட்டற்பாலது மன்றி, என்றும் மறக்கற்பாலது மன்று. அவர்கள் நன்முயற்சி எளிதிற் கைகூடுமாறு கடவுள் கருணைசெய்வாராக.

1915-ம் ஆு ஜனவரி முதல் நமது கலைமகள் தனது மூன்றுவது வயதிற் புகுகின்றனள்.

இவ்வருடத்திலும், பெரியோர்களும், பேரறிஞர்களும், சந்தாநேயர்களும், ஆப்தர்களும், நம் தண்டமிழ்க் கலைமகள் தழைத்தோங்குமாறு, அன்புடன் வளர்த்து ஆதரிப்பார்களென்று பெரிதும் நம்புகின்றேம்.

தமிழ் நாட்டிலே, தமிழ் வளர்ச்சி கருதி நடைபெறும் தமிழ்ப்பத்திரிகையைத் தழைக்கச்செய்வது, அமிழ்தினு மினிய தமிழின் மாட்டு அபிமானமுள்ள ஒவ்வொருவரையும் பொறுத்த கடமையன்றோ? நிற்க,

அறிஞர்கள் அன்புகூர்ந்து வரைந்தனுப்பும் அரிய பெரிய விடயங்களனைத்தையும் பிரசுரிக்க இடம் போதாமையால், இவ் வருடத்தில் கலைமகளைச் சற்றுப் பெரிதாக்கலாமென நினைத்தேம். கலைமகள் உருவிற் பெரிதாகவேண்டுமானல், பொருட்செலவும் சிறிது அதிகப்படுமன்றோ? அதனல் சந்தா சிறிது உயர்த்தப்பட வேண்டிவருமே.

மேல்நாட்டில், பகைவர்களால் நமது இராசாங்கத்தாருக்கு நேர்ந்திருக்கும் இடுக்கண், அவர்களது அன்புள்ள குடிகளாகிய நம்மையெல்லாம் பற்றிநிற்றலை யோசிக்குமிடத்து, இப்பொழுது அவ்வெண்ணத்தைக் கைவிடல் வேண்டுமென்றும், கலைமகள் இருக்குமளவிற்குப் பழுதுநேராமல் பாதுகாக்கவேண்டுவதே நாம் இப்போது செய்யவேண்டிய வேலையென்றும் நிச்சயித்தேம்.

ஆதலின், அன்பு நிரம்பிய சந்தாநேயர்கள் ஒவ்வொருவரும் முன்போல் தயைசெய்து தமது சந்தாவை முற்பணமாக உதவி நம் கலைமகளைத் தளர்ச்சியுறாது வளர்ப்பது மன்றி, தம் மாற் கூடியவரையில் இவ்வருடத்திற்குப் புதிய சந்தா நேயர்களைச் சேர்த்துத் தந்து ஆதரிக்குமாறும் பெரிதும் வேண்டுகின்றேம்.

நமது நன்மையனைத்தும் இடையூறு சிறிது மின்றி நாமடைவதற்கு, நமது இராசாங்கத்தார் மிகுவிரைவில் பகைவரை வென்று மேன்மைபெற்றேங்கத் திருவருள் புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வழிபடுகின்றேம்.

பத்திராதிபர்.

சைவசித்தாந்த மகா சமாஜம்.

மேற்படி சமாஜத்தின் ஒன்பதாமாண்டின் மகாஜனக் கூட்டம், திருமகள் வதனமெனப் பொலியும் "கூடலூர்" என்னுந் தலத்தில், சென்ற டிசம்பர் ௴ 25, 26, 27-ம் ௳ களில் செவ்வனே நடைபெற்ற சீர்த்தி எம்மனோர் கூறத்தரமன்றே. ஷ மாதம் 24-ம் திகதியன்று இரவு சுமார் 8 மணிக்கு, சாலிகண்டகுரீஇ யினங்கள் செல்லுமாபோல், ஆர்வம் பொங்கிய திரளான மாந்தர்கள், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ

ஞானியார் மடாலயத்துச்சுவாமிகளைச்சென்று வரவேற்றனர், மேளதாள வாத்தியமுழக்குமிகவே. 25-ம் உ வெள்ளிக்கிழமை ஸ்ரீமத் ஞானியார் மடத்துச் சுவாமிகள் அக்கிராசனமமர்ந்தது, எம்மனோரின் றவமோ, அல்லது இச் சமாசத்தின் நல்லகாலமேயோ அறியேம். பகல் 12 மணிக்குச் சபை கூடிற்று. திருவாரூர் ஸ்ரீமத் குருஸ்வாமிதேசிகரவர்களால்தேவார பாராயணமும், காரியதரிசி ஸ்ரீமான் குப்புசாமிமுதலியாரவர்களால் சபாநாயகரவர்கட்கு உபசாரணைப் பத்திரம் வாசித்தலும் முடிந்தபின்னர், அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டது. உடனே சர்க்கரைப் பந்தரில் தேன்மாரி பொழிந்தாலென்ன, தரணிமீதின் மாந்தர் தழைக்க நவிலரு நல்லுரையால் நம் சுவாமிகள் முன்னுரை கூறினார்கள். உடனே முதலில் மதுரை ஸ்ரீமான் ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை B.A. B.L. அவர்களால் "ஞானப்போர்" என்னும் விஷயம் பலருமினிதுணருமாறு பேசப்பட்டதும், தற்காலம் ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தில் நமது அரசர்க்கு வெற்றியுண்டாக வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்து, நம்மால் கூடிய உதவியைச்செய்ய வேண்டுமென்றும், லார்டு ஹார்டிஞ்சின் குமாரரின் பிரிவாற்றாமையால், கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு, கவர்னர் மூலமாக அனுதாபத் தந்தி அனுப்ப வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அரைமணி நேரம் இளைப்பாறினர். பின்னர், பழவேற்காடு, பிரம்மஸ்ரீ அமிர்தேசுவர குருக்கள் அவர்கள் "பதிபசுபாசத்திரயம்" என்பதைப்பற்றியும், தூத்துக்குடி ஸ்ரீமான் பொ. முத்தையபிள்ளையவர்கள் "தாயுமானவர் கொள்கை" என்பதைப் பற்றியும், குளித்தலை பிரம்மஸ்ரீ அரங்கசாமி ஐயரவர்கள் "சரியையாதிகளின் சொரூபம்" என்பதைப்பற்றியும், செங்கற்பட்டு ஸ்ரீமான் பொன்மார் நடேசமுதலியாரவர்கள் "விருந்தோம்பல்" என்பதைப்பற்றியும், மிக்க தெளிவாகப் பிரசங்கித்தார்கள். பிறகு சபாநாயகரவர்கள் அப் பிரசங்கங்களைப்பற்றிப் பேசித் தேன்மாரி பொழிந்தார்கள். தேவார பாராயணம் செய்யப்பட்டதும் சபை கலைந்தது. ஆநந்தத்தில் மூழ்கிச்சென்றனர் அன்பர்கள்.

26-ம் உ சனிக்கிழமை பகல் 11 மணிக்குச் சபை கூடித் தேவார பாராயணம் செய்யப்பட்டதும், மஞ்சகுப்பம் ஸ்ரீமான். வை. கந்தசாமி முதலியாரவர்களால் "ஸ்ரீ விநாயகர் மகிமை" என்பதும், புதுவைக் கலைமகள் பத்திராதிபர் ஸ்ரீமான் சி. பங்காருப்பத்தர் அவர்களால் "பரோபகாரம்" என்பதும், போளூர் ஸ்ரீமான் ஆ. தா. அரங்கசாமி நாயகரவர்களால் "அறம்" என்பதும், சித்தூர் ஸ்ரீமான் அரங்கசாமி அப்பா அவர்களால் "உருத்திராக்கம்" என்பதும் உபன்னியாசிக்கப்பட்டன. 2-30-3-0

வரையில் இளைப்பாறல். பிறகு சகிந்த்ராபாத் ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் அவர்களால் "மங்கையர்க்கரசியார் சரிதமும்", மன்னார் ஸ்ரீமான் R. S. சுப்ரமண்யம் அவர்களால் "Eight flowers of Life or saiva Siddanta practice" என்பது ஆங்கிலத்திலும், புதுவை ஸ்ரீமான் கு. சோமசுந்தரம் பிள்ளையவர்களால் "மனிதர் கடமை" என்பதும், சிதம்பரம் ஸ்ரீமான் தில்லைநாயகமுதலியாரவர்களால் "கடவுள் வணக்கம்" என்பதும் பேசப் பட்டன. அன்று முடிவில் சபாநாயகரி பொழிந்தது அமிர்தமழையே. தேவாரபாராயணம் செய்யப்பட்டதும் சபை கலைந்தது.

27 - ம் உ ஞாயிற்றுக்கிழமை காலை சமாஜக்குழாம் போட்டோ எடுக்கப்பட்டது. பகல் 12 மணிக்குச் சபை கூடி, தேவாரபாராயணம் செய்யப்பட்டதும், சித்தூர் ஸ்ரீமான் C. T. பார்த்தசாரதி முதலியார் B.A. L.T. அவர்கள் "சண்முகாவதார மான்மியம்" என்பதைப்பற்றி யும், கெண்டி மாகறல் ஸ்ரீமான் கார்த்திகேயமுதலியாரவர்கள் "தமிழ்" என்பதைப்பற்றியும், மஞ்சகுப்பம் ஸ்ரீமான் வி. ஐ. சொக்கலிங்கஉடையா ரவர்கள் "சைவபால்யர்களுக்கோர் விஞ்ஞாபனம்" என்பதைப்பற்றியும், சென்னை ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்கள் "இரக்கம்" என்பதைப்பற்றியும், வாலாஜாநகர் ஸ்ரீமான் கமலநாதமுதலியாரவர்கள் "திருத்தொண்டர் மகிமை" என்பதைப்பற்றியும், மணிமங்கலம் ஸ்ரீமான் திருநாவுக்கரசுமுதலியாரவர்கள் "இன்பம்" என்பதைப்பற்றியும் உபன் னியசித்தார்கள். 2-35—3-0 வரையில் இளைப்பாறல். பின்னர், சென்னை ஸ்ரீமான் ஆ. சிங்காரவேல் முதலியாரவர்களால் "தீட்சை" என்பதும், திருக்கோவலூர் ஸ்ரீமான் M. R. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களால் "பதி புண்ணியம்" என்பதும், திருநள்ளாறு ஸ்ரீமான் S. நடேசதேசிகரவர்க ளால் "ஈசுவர உபாசனை" என்பதும், சென்னை ஸ்ரீமான் S. சச்சிதானந் தம் பிள்ளையவர்களால் "சைவசமயத்திற்குப் பாடுபடுமுறை" என்பதும், மன்னார் ஸ்ரீமான் R. S. சுப்ரமண்யம் அவர்களால் "Eight flowers of Life or saiva Siddanta practice" என்பது தமிழிலும், சென்னை ஸ்ரீமான் கி. குப்புசாமி முதலியாரவர்களால் "சைவசித்தாந்த சாரம்" என்பதும் பேசப்பட்டன. சபாநாயகசுவாமிகள் தண்ணளிசுரந்து முடிவுரை கூறி யாவரையும் ஆநந்தக்கடலி லமிழ்த்தியருளினார்கள். பின்னர், காரிய தரிசி ஸ்ரீமான் கி. குப்புசாமிமுதலியாரவர்கள் யாவருக்கும் வந்தனங் கூற, தேவாரபாராயணத்தோடு சபை பூர்த்தியடைந்தது. கூடலூரில் நாமெல்லோரும் இப் பேராநந்தத்தைப் பெறுதற்குக் காரண பூதராயிருந்த ஸ்ரீமான் அ. த. முத்துக்குமாரசாமி செட்டியார் முதலியவர்களுடைய அன்புடைமை யாவராலும் கொண்டாடத்தக்கதே. சைவசித்தாந்தமகா

சமாஜம் என்றும் ஓங்க இறைவன் அருள்புரிவாராக. சுபம். சுபம். சுபம்.

T. M. துரைசாமி முதலியார்,
திருவெண்ணெய்நல்லூர்.

கன்னன் தருமம்.

(கன்னன் தனதந்திய காலத்தில் கண்ணனுக்குத் தானமாகக் கொடுத்த தர்மம் பின்னவனைக் காக்காததின் காரணவாராய்ச்சி.)

தர்மம் தலைகாக்கு மென்பது ஆன்றோர் கூற்று. இஃதிங்ஙன மிருக்க, மகாபாரதத்தில் சூரியகுமாரனாகிய கன்னன், தன் னிறுதியான தருணத்தையும் பாராது, தன்னைப்பாதுகாத்து நின்ற தர்மத்தை ஸ்ரீகிருஷ் ணனுக்குத் தானமாகக் கொடுத்தும், அது பின் அவனைக் காவாதுவிட்டு விட்டதே? அவன் தனது வாழ்நாள் முழுவதிலுந் தேடிச்சம்பாதிக்கப் பெற்ற தர்மத்தையே எள்ளளவுமின்றித் தானமாகக் கொடுத்தால், அந்தத் தர்மம் எத்தனையோமடங்கு அதிகப்பட்டு விடுமன்றோ? அங்ஙனமிருந் தும் அத்தருமமானது அவனை அத்தகைய அந்தியகாலத்திற் கைவிட்ட தின் காரண மென்னவென்று கற்றோரல்லாத எம்போலிகள் சிலருக்கு மிக்க ஆசங்கைதோன்றலாம். அதற்கு நாயேன் என் சிற்றறிவிற்கெட் டியமட்டில் ஒருவாறு சமாதானங் கூறுவல்.

கன்னன் அப் பகவானுக்குத் தானமாகக்கொடுத்தது எந்தத் தர் மத்தை? அத்தர்மம் பின்னும் அவனைக்காவாததின் காரணம் என்ன? என்பதே வினா. ஆனால் நமது பண்டைச் சாத்திரங்களில் "இருவினை யொப்புமலபரிபாகம்" என்றும், "இருள்சேரிருவினையுஞ் சேராவிறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு" என்றும் கூறியிருப்பதால், இரு வினையுமொத்த விடத்திலேயே மோட்சமாகிய வீடு சித்திக்குமென்பது பெற்றாம். அங்கே அக்கன்னனுடைய தர்மத்தைத் தானமாகப் பெறச் சென்றவர் யாவர்? அவர் ஸ்ரீகிருஷ்ணனாகிய பகவான். விஷ்ணு தான் ஓர் ஆன்மாவிற்கு எப்போது பரிபக்குவஞ் சம்பவிக்குமென்று காத்திருப்பவ ராதலால், அக் கன்னனது தர்மமாகிய நல்வினை இன்னும் அவன் மாட்டிருக்குமாயின் இன்னும் தேகமெடுத்து வருந்துவான் என்று இரக் கங்கொண்டு, அர்ச்சுனன் முதலியோருக்குத் தாம் அக்கன்னனது உயிர் போம் வண்ணம் அவனைத் தற்காக்கும் தர்மத்தைத் தானமாக வாங்கப்

என்ற அறவாக்கை நீ நம்பவில்லையோ? உன் இஷ்டப்படி செய். யான் என்ன செய்வது" என்று மனம் வாடித் திரும்பினர்.

(தொடரும்.)

M. V. சுப்ரமண்ய ஐயர்.

இலக்கியப் பகுதி.

சீவக சிந்தாமணி.

௩. காந்தருவதத்தையா ரிலம்பகம்.

(வெண்டாமரை ௨, 257-வது பக்கத் தொடர்ச்சி.)

சோலையிற்சென்று வருந்தியிருந்த ஸ்ரீதத்தன், வழிச்செல்வான் போன்று அங்கு வந்த **தரன்** என்னும் அவ் வித்தியாதரனைச் சந்தித்து, தான் பொருள் தேடுமாறு கடலிற்சென்றதும், காற்றுலே கலங்கவிழ்ந்து கொண்டுவந்த பொருளும் கூடவந்த பரிசனங்களும் அழிவுற்றதும், தெப்பம் உதவியாகத் தான் தப்பிப் பிழைத்ததும் ஆகிய தனக்கு நேர்ந்த துன்பங்களையெல்லாம் எடுத்து மான்களூ மரங்களும் இரங்கும்படி ஆறுத் துயரொடு கூறினன். கூறுதலும், தரன், ஸ்ரீதத்தனைத் தேற்றி,

28. விஞ்சையில் வல்லேன் விளிந்தநின் றோழரோ
டெஞ்சிய வான்பொரு ளெல்லா மிமைப்பினுள்
வஞ்சமொன் றின்றி மறித்தே தருகுவன்
நெஞ்சிற் குழைந்து நினையன்மி னென்றான்.

என்று அவன் மனங்கொளக் கூறி, "இம்மலைமிசை யேறத் துணிக" எனத் தான் அப்பொழுது உண்டுபண்ணின ஆட்டுக்கடாவின்

---

28. "யான் பல வித்தைகளிலும் வல்லவனாதலின், கெட்ட நின் தோழரோடு நின்னை நீங்கிய பொருளெல்லாம், ஒரு மாத்திரைப் பொழுதில், வஞ்சனை சிறிதுமில்லாததாக, கெடுதியை நீக்கித் தருவேன்; இனி நீவிர் வருந்தி மனத்திற் பலகால் நினையா தொழிவீராக" என்றான்.

வான் பொருள் – நீதியாலுண்டான பொருள். மறித்தே தருகுவன் – மீளவும் தருவேனென்றுமாம். நினையன்மின் – ஒருவரைக் கூறும் பன்மை.

மேல் ஸ்ரீதத்தனை யேற்றிக்கொண்டு மிகு விரைவாகப் பறந்து சென்று, நறுமலர்ச் சோலையும் நீர்ப்பொசிவு மிகுந்த சாரலுமுடைய மலையைச் சார்ந்தனன். சார்தலும், ஸ்ரீதத்தன் அம்மலையிலே,

29. கண்டா லினியன காண்டற் கரியன
தண்டா மரையவ டாழுந் தகையன
கொண்டான் கொழுங்கனி கோட்டிடைத் தூங்குவ
வுண்டா னமிழ்தொத் துடம்பு குளிர்ந்தான்.

பின்னும் அங்குள்ள சந்தனச் சோலையில், குங்குமம், சுரபுன்னை முதலிய மரங்களைக் கண்ணுக் கினிமையாகப் பார்த்துக் களிப்புற்ற அந் நாய்கனை நோக்கி, தரன் "இம்மலையிலே இன்னும் காததூரம் கடந்தால், நாதன் உறைவதோர் நன்னகருண்டு; ஆங்குப் போகக்கடவோம் எழுக" என, அதற்கு ஸ்ரீதத்தன் உடன்பட, அவ்விருவரும் போய் அந் நகரத்தைச் சார்ந்தார்கள்.

அவர்களடைந்த அவ் வெள்ளி மலையின் சிறப்பையும், அவ் வெற்பில் விளங்கும் நகரத்தின் சிறப்பையும் வர்ணித்தலை, சீவக சிந்தாமணி நூலாசிரியராகிய திருத்தக்க தேவர்க்கே விட்டுவிட்டு மேல் நடக்கும் விஷயத்திற் புகுவோம்.

தேவ ருலகெனத் திகழும் அந் நகரத்துட் சென்ற அவ்விருவரும் வாகனத்தினின்று மிரங்கி, செம்பொன் மயமாக விளங்கும் தானுடைய வீட்டிற் புகுதலும், தரன், ஸ்ரீதத்தனுக்கு விருந்திட் டுபசரித்துப் பின் கூறுவானாயினன்.

"இந்நகர்க் கரசனாகிய கலுழவேகன் என்பவனுக்கு மனைவியாகிய தாரணி யென்பாள், ஆடவ ரறிவுபோழு மணிமாலை யணங்கினன்னாள், விண்ணகம் விளங்க வெண்கோட் டிளம்பிறை முளைத்ததே போல், ஒரு பாவையைப் பயந்தனள். அன்றைய தினமே, எள்ளை யெறிய இடமில்லையாக, அம் மலைமேல் அரசரெல்லாம் திரண்டு வந்து,

---

29. (அவன் அம் மலையிலே) உலகிற் காணுதற் கரியனவாய், கண்டால் கண்ணுக்கு இனியனவாய், குளிர்ச்சியாகிய தாமரை மலரிலுள்ள திருமகள் விரும்பும் தன்மையுடையனவாய், மரக் கொம்புகளினிடையிலே அமிழ்துபோன்று தொங்குவனவாகிய செழிய பழங்களைக் கைக்கொண்டான்; கொண்டு உண்டான்; உண்டு உடம்பு குளிரப் பெற்றான்.

தூங்குதல் – தொங்குதல்.

அரிய ஆபரணங்களாகிய செல்வத்தையானைமேல்கொணர்ந்து கொடுத்து மணம் பேசினார்கள். அப் பெண்மணியைப் பெற்ற கலுழவேகன், "நிமித்திகன் கடுகச் சாதகம் செய்துவருவானாக" என்று கட்டளையிடலும், அச் சோதிட நூல் வல்லவனும், ஆகாயத்திலோடும் கோள்களைக் கொண்டு சாதகம் செய்து, "இப் பெண்ணிற்கு வரற்பாலனவாகிய நன்மைகளனைத்தும் மண்ணின்மேல் இராசமாபுரத்தே வந்து சேரும்" என்றான்.

அரசர்கள், "எமக்குத் தருவன்" என்னும் அவாவிலே நிற்க, அந் நிமித்திகன், தான் கூறிய வார்த்தையை நம்பி இராசமாபுரத்தே கொடுப்பன் என்று நிற்க, அரசனே, இடமும் வலமும் பாய்கின்ற கதி விசேடத்தைக் கொண்ட குதிரையினது மனத்திற் சுழற்சிபோல, இரண்டிடத்தும் ஏற்பக் கூறி, தன் விருப்பத்தையும் மறைத்து வைத்தான். ஆதலால் அவ்வரசன் நினைத்த காரியம் அந் நிமித்திகன் கூறியதாயே யிருக்கின்றதோ, அன்றி மற்றைய அரசர் நினைத்ததேயோ. இதற்கு முன் அறிய முடியவில்லை. இனி நீ வந்தபடியினாலே அவன் நினைத்ததும் விளங்க அறியக்கடவோம்" என்று சொல்லி, ஸ்ரீதத்தனை அழைத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான் தான்.

30. பால்பரந் தனைய பட்டார் பூவணை பசும்பொற் கட்டிற்
கால்பரந் திருந்த வெங்கட் கதிர்முலை கச்சின் வீக்கி
வேல்பரந் தனைய கண்ணார் வெண்மதிக் கதிர்பெய் கற்றை
போலிவர் கவரி வீச மன்னவ னிருந்த போழ்தின்.

தான் தமது வருகையை வாயில் காப்பாளனால் தெரிவிக்க, அரசன் வருகவென, தானோடு சென்ற ஸ்ரீதத்தன், மன்னனடிகளை வணங்க, அரசன் அவனுக்கு இன்னுரை முகமன் கூறி இருக்கச்செய்து, தாய்

---

30. கச்சாற்கட்டி அடிபரந்து தளராதிருந்த விருப்பத்தை விளைக்கின்ற கண்களுள்ள ஒள்ளிய தனங்களையும், வேல் கொலைத்தொழிலிலே பாவினாற்போலும் கண்களையுமுடைய மகளிர் கற்றையாகிய வெள்ளிய மதியின் கதிர்களைச் சொரிந்தாற்போலும் சாமரம் வீசாநிற்க, பசும்பொன்னாலாகிய கட்டிலிலே, பாலாவி பரந்தாற்போன்ற பட்டுச்சீலை பொருந்திய மலரணையிலே, கலுழவேகன் வீற்றிருந்த காலத்திலே.

பால் — அதன் புகைக்கு ஆகுபெயர். வெங்கண் — காண்பவர்க்குக் காம வெப்பத்தை யுண்டாக்கும் கண் என்றுமாம். கண் — முலைக்கண். கச்சு — முலைக்கட்டு.

தந்தை மனைவி மக்கள் சுற்றம் இவர்கள் நன்மை வினவிய பின்னர், ஸ்ரீதத்தனுக்குச் செப்புவான் :

"ஸ்ரீதத்தரே! நட்பு நமக்கு இப்பொழு துண்டானதன்று; எம்முடையவர் எழுவர் நம்முடையவர் எழுவரளவும் நின்றது அக்கேண்மை; அன்றியும் சமயமும் ஒன்றே; ஆதலால் யான் அரசன் நீ வணிகன் என்று இரண்டு சாதி யில்லைகாண்; இது நினது வீடுகாண்" என்றான்.

இங்ஙனம் கூறிய வித்தியாதர வுலகத் தரசனாகிய கலுழவேகனை ஸ்ரீதத்தன் கண்குளிர நோக்கிக் கழறுகின்றான் :

"அரசரேறே! "வெள்ளி மலையினிடத்தே தென் பக்கத்திலுள்ள வித்தியாதர ருலகின் பங்கில் காந்தார நாட்டில் வித்தியாதர லோக மாநகரின்கண்ணுள்ள கருடவேகன், வேதண்ட வேந்தர் வேந்தன், நமது குலத்திற்குத் தெய்வங் காணும்; இதனை அறிந்திருப்பீராக" என்று என்னுடைய தந்தைக்கு அவனுடைய தந்தை தான் முன்பு கேட்டிருந்தபடியே மொழிந்ததை யான் கேட்டுள்ளேன்; ஆதலின், கொங்குடை முல்லைக் கொய்போ திருவடங் கிடந்த மார்ப! எமது குலம் இவ்விடத்து நமதடியைத் தவறுவதன்றா யிருந்தது" என்று இசைத்தனன்.

அது கேட்டுக் கலுழவேகன், ஸ்ரீதத்தனது கடகமணிந்த முன் கையைப் பற்றிச்சென்று தன் மனைவியைக் காட்டினனாக, அவளும் ஒப்புடன் உபசரிக்க, ஸ்ரீதத்தன் அவ்விடத்து நின்ற அழகிய மணியைப் பூத்த வல்லிபோன்ற காந்தருவதத்தையை அச்சம் நிகழ்ந்தமையால் மகளென்று அறியானாய், "பளிங்கு மாடத்திலே தோன்றிய ஓர் காம வல்லியோ! அருமணிக் கொடியோ! மின்னோ! வானவர்கோன் மனத்தே வரைந்த மணிப்பாவை கொல்லோ!" என்று மனஞ் சுழலா நிற்க, அவனுக்கு மன்னன் வழுத்துகின்றான்.

31. "தூசுலாய்க் கிடந்த வல்குற் றுப்புறழ் தொண்டைச் செவ்வாய்
வாசவார் குழலின் மின்போல் வருமுலைச் சாந்து நக்கி
யூசல்பாய்ந் தாடிக் காதிற் குண்டல மிலங்க நின்றாள்
காசில்யாழ்க் கணங்கொ டெய்வக் காந்தர்வ தத்தை யென்பாள்.

இக் காந்தர்வதத்தை, வீணையாலும் அழகினாலும் உலகமெல்லாவற்றினும் விளக்கமுற்று நின்றாள். உனது மகளாகிய இவளை நீயே

---

31. ஆடை சூழ்ந்து கிடந்த அல்குலையும், பவழத்தை யொத்த தொண்டைக் கனிபோலும் சிவந்த வாயையும், மணம்பொருந்திய நீண்ட கூந்தலையுமுடைய ஒரு மின்னல்போல, காதிலணிந்த குண்டலங்கள்

நின்பதியேறக் கொண்டுபோய், இவளை இசையாற் பொருது வெல்பவன் யாவனாயினு மாகுக; அங்ஙனம் வென்றவனுக்கு இவள் உரியவளாக மணஞ்செய்து கொடுப்பாயாக" என்று இயம்ப, ஸ்ரீதத்தன் "அங்ஙனமே அடிமைப்பணி செய்வல்" என்றான்.

(வரும்.)

பத்திராதிபர்.

சாத்திரப் பகுதி.

குருபக்தி.

(தொடர்ச்சி.)

இங்ஙனம் குருமார் பலவிதமானாலும் பக்தி ஒன்றுமட்டு மிருந்தால் சீடன் மேன்மையடைவதில் ஐயமேயில்லை. பக்தி யில்லாவிடிலோ, குரு எவ்வளவு புத்திமானா யிருந்திடினும், போதிப்பதில் மிகச் சமர்த்தனாயினும், சீடன் நன்மை யடையான். அர்ஜுனனுக்குக் கிருஷ்ணனிடம் பந்துத்வத்தை முன்னிட்ட சிநேகம் மட்டில் இருந்ததன்றி, 'குரு பக்தி பூர்ணமா யில்லாததாலும், அவன் மனமுருகி வேண்டாத காலத்தில் உபதேசிக்கப்பட்டதாலும், அவன், கீதையின் பயனை அப்பொழுது அடையவில்லை. யுத்த முடிவில் கண்ணனை நோக்கி "ஸ்வாமி, யுத்த ரங்கத்தில் தாங்கள் உபதேசித்த கீதை என்னுள்ளத்தில் நன்கு பதியவில்லை. ஆகையால், மறுபடி எனக்கு அதை விளக்கியருளவேண்டும்" என வேண்ட, பரம கருணாமூர்த்தியான எந்தை மீண்டும், கீதையின் ஸாரத்தை ஸம்க்ஷேபமாக அங்கு உபதேசித்துள்ளார்.

வளர்கின்ற தனங்களிற் பூசிய சந்தனத்தைத் தீண்டிப் போக்குவரவுடைய வாய் அசைந்து விளங்க நாணி நின்றவள், குற்றமற்ற யாழ்விச்சைத் தொகுதிகொண்ட தெய்வமாகிய காந்தருவதத்தை யென்னும் பெயரை யுடையாள்.

உறழ் — உவம உருபு. வான்குழல் — மேகம்போலும் கரிய கூந்தலுமாம். ஊசல் பாய்தல் — ஊஞ்சல்போ லுலாவுதல். நாணத்தால் தலைவணங்கி நிற்பதனால், குண்டலம் சாந்தைத் தீண்டிப் போக்குவரவுடைத்தா யசைந்திலங்க நின்றாளென்க. யாழ்விச்சைத் தொகுதி கொண்ட தெய்வம் — மாதங்கி.

ஆகையால் பக்தி யிருந்திடில், தான் கேட்ட குரு வாக்கியத்தில் சிரத்தையும், நம்புதலும், விசுவாசமு முண்டாம். எவனுக்குக் குரு வாக்கியத்தில் நம்பிக்கை யில்லையோ அவனுக்கு அவ் வாக்கியத்தால் யாதொரு நன்மையு முண்டாகாது. இதனையே, சுருதியும் (சாந்தி பெறாதவனுக்கும், மகனல்லாதவனுக்கும், சீடனல்லாதவனுக்கும் உபதேசிக்கலாகாது) என்று கூறியுள்ளது. அன்றியும், கீதை (இது தவமற்றவனுக்கும், பக்தியில்லாதவனுக்கும், என்னிடத்தில் த்வேஷமுடையவனுக்கும் ஒருபோதும் சொல்லக்கூடாது) என்றும், ஸ்மிருதிகள் (சீட வடிவமும், வைராக்கியமு மில்லாத அநதிகாரிக்குச் செய்யப்பட்ட சொற்ப உபதேசமும் நாயினால் நக்கப்பட்ட பசுவின் பால்போல அபவித்ரத்தை யடைகின்றது; வித்வான் வினவுதலின்றி எவருக்கும் உபதேசிப்பதில்லை. நியாயமின்றிக் கேட்போனுக்கும் உபதேசிப்பதில்லை) என்றும் தெளிவாய் குருபக்தியின் மேன்மையையும், ஒருவன் மேன்மை யடைவதற்கு அதன் அவசியத்தையும் கூறியுள்ளன.

ஆகையால், சிரவணத்தில் சிரத்தை யுண்டுபண்ணுவதால், குரு பக்தியே ஞானத்திற்குச் சிறந்த சாதனமெனவும், எவர்களிடம் உண்மையான மோக்ஷ இச்சையும் சித்த சுத்தியும் உண்டோ, அவர்களிடமே, அப் பக்தி விசேஷமாய்க் காணப்படுமென்றும், குருபக்தி யுடையோனே, இகத்தில் யாவராலும் பூஜ்யதை யடைவதுடன் பாத்திலும் மேன்மை யடைவனென்றும், அஃதிலான் நல்லோர்களால் நாஸ்திகனென நிந்திக்கப்பட்டுக் கொடிய நாகில் அமிழ்வனென்றும் குருபக்தியின் மகிமை மிகச் சுருக்கிக் கூறப்பட்டது.

முற்றும்.

M. V. சுப்ரமண்ய ஐயர்.

ஞான ராமாயணம்.

காப்பு.

வெண்பா.

தானாகு வானுநற் றாய்தந்தை யாவானுங்
கோனாகு வானுங் குணவானும்—நானாகி
நின்றானு மோக்க நிலையானு ஞானகுகைக்
குன்றாகு வானுங் குரு.

மாயாப் பிறவி மயக்கமறுத் தாண்டுகொண்ட
தாயாகுஞ் சற்குரவன் றாண்மலரை—யோயாது
வாக்கானு மோடு மனத்தானும் வாழ்த்துவமேல்
தாக்கா தெமன்பாசந் தான்.

நூல்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

முதுமறை முழக்கு முத்தியா மயோத்தி
முறைநக ரதிற்றனிப் பிரம
மதுதய ரதனுய் ஞானமு மிச்சை
கிரியையென் னறிவைசத் தியரோ
டிதமுற வாழ்போழ் தெழில்பெறு ஞான
சத்தியாங் கோசலை யிடத்தே
பொதுவள ரான்மா விராமனுய்ப் பிறந்தான்
புலவர்சேர் புவியிடை மாதோ. (1)

பிறந்தவ னவ்வி யக்தபா லியத்தாற்
பேர்பெறுந் தன்னையே மறந்து
கறந்தவஞ் ஞான சீவதன் மயனுய்க்
காயவிந் தியங்களுக் கரசாய்த்
துறந்தசி ரவண மென்முனி வதிட்டத்
தூயனை நண்ணிம னனமென்
சிறந்தகோ சிகனைத் தொடர்ந்துவை ராக்யந்
திகழிலக் குவனுடன் சென்றான். (2)

உறைபெரும் பஞ்ச பாதக மென்னு
முயர்வரைக் கான்பல கடந்தே
யிறையவ ஞன்ம விராமனுர் ஞான
வெழிற்கணை செலுத்தியா வரணக்
கறைநிக ரான தாடகை யுரத்தைக்
காணொ வகையறுத் தெறிந்து
சிறைதரு மிச்சை யென்னுமா ரீசன்
சிதறிடக் காட்டினன் றிறமே. (3)

(தொடரும்.)

செந்தமிழ்க்கவி, K. V. இராமசந்திர ஐயர்.

16

கலைமகள் பத்திரிகைக்கு ஓர் நன்கொடை.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீமான் வ. சிதம்பரநாத பத்தரவர்கள், கலைமகள் பத்திரிகையின் அவசியமான விஷய மெதற்கேனும் உபயோகித்துக்கொள்கவென்று ரூபாய் 5 அனுப் பினதுமன்றி, சமயம் நேரும்போதெல்லாம் தம்மால் இயன்ற உதவிசெய்வதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

அன்றியும், தமது சகோதரர் ஸ்ரீமான் V. விநாயகர் தம்பி பத்த ரவர்களைக்கொண்டு பத்திரிகைக்கு விஷயதானம் செய்வித் தும் அங்குச் சந்தாநேயர்களைச் சேர்த்துத் தந்தும் நமக்கு மிக்க உபகாரிகளாய் நிற்கின்றார்கள்.

இவர்கள் அன்புடைமை என்றும் மறக்கற் பாலதன்று. இவர்கட்குத் தமிழின் மாட்டுள்ள அபிமானமும், இவர்களது உதாரகுணமும் புகழுக்குரியனவே.

நமது பத்தரவர்களுக்கு நமது நன்றியை அனுப்புவது மன்றி, அவர்கள் நீண்ட ஆயுள்பெற்று அரோக திடகாத்திர சரீர தாரியாய் வாழத் திருவருள் புரியுமாறு, இறைவனை யிறைஞ்சு தலும் செய்கின்றோம்.

அவ்வைந்து ரூபாயும், சென்ற மாதத்துக் கலைமகளில், யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலர் திருவுருவப் படம் அமைத்தலில் உபயோகிக்கப்பட்டன.

பத்திராதிபர்.

கலைமகள் கழகத்திற்கு ஓர் நன்கொடை.

புதுவை ஸ்ரீமான் மளிகை ஸ்ரீநிவாச - அரங்கசாமி முத லியா ரவர்கள், நமது கலைமகள் கழகத்தின் புத்தகசாலைக்கு, 1. மூவர் தேவாரம், 2. திருவருட்பா, 3. திருத்தணிகைப் பதிகம், 4. தேவாரத்திரட்டு, 5. பிரபுலிங்கலீலை மூலம் ஆகிய ஐந்து புத்த

கங்கள் நன்கொடை யளித்தார்கள். நமது கழகத்திற்கு, முன் புத்தகாலயம் (அலமாரி) நன்கொடை யளித்தவர்களும் இவர்களே.

கலைமகள் கழகத்தின் அபிவிருத்தி விஷயத்தில் இவர்களுக்குள்ள ஊக்கமும் அன்பும் எவரும் எடுத்துப் பாராட்டற்குரியன.

அன்புகூர்ந்து புத்தக நன்கொடை யளித்ததற்காக, கனம் ஸ்ரீநிவாச அரங்கசாமி முதலியாரவர்களுக்குக் கலைமகள் கழகத்தார் நன்றி செலுத்துகின்றார்கள்.

தி. திருப்புளிசாமி ஐயர்,
கழகத்தின் காரியதரிசி.

வைத்தியக் குறிப்பு.

நீரடைப்பு:— இதனால் அவஸ்தைப்படும் ஒவ்வொருவரும் ஒரு செவ்விளநீரைத் துவாரமின்றி ஒருபக்கத்து மட்டையைச்சீவியெடுத்து, அதைத் தண்ணீரிற்போட்டு அழுக வேகவைத்தெடுத்துக் குளிர ஆற வைத்து, அவ் விளநீரைத் துளைத்து அதில் ஒரு சல்லியெடை வெடியுப்பும், பொரித்த வெங்காரமும், சீரகமும், பனங் கற்கண்டும் பொடித்துப்போட்டுக் கலக்கி இவ்விதம் ஒருவேளை அல்லது இரண்டுவேளை சாப்பிட நீரைப் பிரித்து உடனே சுகத்தைத் தரும்.

காதடைப்பு:— இதனால் கஷ்டப்படுகிற ஒவ்வொருவரும் ஒருபடி மிளகாய்ப் பழத்தை ஓர் புதிய மண்பாண்டத்திற் போட்டு, அதில் 2 படி. தண்ணீரை விட்டு ½ படியாகச் சுண்டவைத்து அதை இறக்கி மத்திட்டுக் கடைந்து பிழிந்த சாற்றில் ½ படி நல்லெண்ணெயும், ½ படி பசுவின் பாலும் சேர்த்துக் கலக்கி, அதில் பசுவின் பால்விட் டரைத்த கொஞ்சம் வாசனைத் திரவியத்தையும் சேர்த்து மத்தித்து, அடுப்பேற்றி மெழுகு பதமாக வடித்தெடுத்து ஒரு குப்பியில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு ஸ்நானஞ் செய்துவரச் சுகத்தைக் கொடுக்கும்.

இடுப்புவலி:— எப்போதும் இவ் வலியுடையவர்கள் ஒரு முற்றல் தேங்காயை உடைத்துப் பூத்திருகிப் பாலெடுத்து வடிகட்டி, அதை ஒரு பாண்டத்தில் விட்டு 1 பலம் ஒருப்பூட்டு வெள்வெங்காயத்தை உரித்துப்

போட்டு வேகவைத்து மத்திட்டுக் கடைந்து, அதில் 1 பலம் பனைவெல்லத்தைப் பொடித்துக் கொட்டி லேகியம்போல் கிளறி எடுத்துக்கொண்டு காலை மாலை 2 வேளைகளிலும் கொட்டைப்பாக் களவு சாப்பிட்டுவரத் தீரும்.

மற்றொருவிதம் :—அரைக்கால்படி மேற்றோல் போக்கிய உளுத்தம்பருப்பை ஊறவைத்து, உப்புப்போடாமல் ஆட்டி அம் மாவை வடைதட்டி நல்லெண்ணெயில் பொன்னிறமாக வேகவைத்து, அதிகாலையிற் சாப்பிடுவதுடன் 10 மணி பரியந்தம் உலாத்திக்கொண்டிருந்து அப்பால் வெறும் ரசத்துடன் சாப்பிட்டுவரச் சுகந்தரும்.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,

பழனிஸ்தலம்.

சமாசாரம்.

வெள்ளையூர் ஐக்கிய நாணயச் சங்கம்.

இச் சங்கத்தின் முதலாவது வருடோற்சவம், வெள்ளையூரில், 1915-ம் ௵ ஜனவரி ௴ 10-ம் ௳ ஞாயிற்றுக்கிழமை, உளுந்தூர்பேட்டை டெப்டி தாசில்தார் ஸ்ரீமான் S. கிருஷ்ணய்யர் B. A. அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது.

சபாநாயகர் முகவுரை கூறினதும், கூடலூர் சர்க்கில் ஐக்கிய சங்க இனிஸ்பெக்டர் ஸ்ரீமான் C. கோவிந்தசாமி முதலியாரவர்களால் 'கல்வி' என்பதும், பாதூர் ஐக்கிய நாணயச் சங்க அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் கந்தசாமி உடையாரவர்களால் "நம் சங்கம்" என்பதும், சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் V. I. சொக்கலிங்க உடையாரவர்களால் 'ஒழுக்கம்' என்பதும், சங்க பஞ்சாயத்தார் ஸ்ரீமான் S. சுப்புராயபிள்ளையவர்களால் "நம் சங்கத்தாலெய்திய பயன்" என்பதும், மணம்பூண்டி ஐக்கிய நாணயச் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் M. R. குமாரசாமிப்பிள்ளை F. T. S. அவர்களால் 'ஐக்கியம்' என்பதும் உபன்னியசிக்கப் பட்டன. சபாநாயகர் முடிவுரை கூறினதும், காரியதரிசியின் வந்தனத்தோடு சங்கம் சம்பூர்த்தியடைந்தது.

19

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பருய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

இந்தியன் பெட்டல் டஸ்டு:— அதி மனோரம்மியமான சுகந்த கலவை பொட்டலம். உடுப்பு பெட்டிகளில் வைத்திருந்தால் உடைகளுக்கு மிகவும் உன்னதமான சுவாசனை எற்றுவதுமன்னியில், வண்டு முதலிய பூச்சிகள் துணிகளில் அணுகாமல் காக்கும். இதன் இன்பமான சுகந்தம் நெடுநாள் நிற்கும். பொட்டலம் 1-க்கு விலை அணு 4. ஒன்று முதல் 12 பொட்டலங்கள் வரையிலனுப்ப வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

உடுப்புகளுக்கு விலாசம் போடும் அழியாத மை அல்லது இங்கி:— பருத்தி, கம்பளி, பட்டு முதலிய வஸ்திரங்களில் எவ்வளவு தடவை வஸ்திரங்களைத் துவைத்தாலும், அல்லது வெளுத்தாலும் விலாசம் எக்காலத்திலும் அழியாது. இந்த மையினால் விலாசம் போட்டால் உடுப்புகளைத் திருட்டுப்போகாமலும், மாற்றப்படாமலும் காக்கலாம். விலை சீசா 1-க்கு அணு 8. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

சர்க்கரையின் பில்லைகள்:—சர்க்கரையைவிட 500 மடங்கு தித்திப்பு ஜாஸ்தியாயுள்ள சர்க்கரையின் என்ற இந்த வஸ்து சிறு பில்லைகளாக எமக்காக ஸ்பெஷலாக சீர்மையிலிருந்து தயாராக்கப்பட்டு தருவித்து விற்கப்பட்டு வருகிறது. ஒரு சேர் பால்

அல்லது காபி அல்லது தேயிலைக்கு ஒன்று அல்லது இரண்டு பில்லைகள் உபயோகித்தால் ஒருபிடி சர்க்கரையை உபயோகித்தால் எவ்வளவு மதுரமும் இனிப்புமிருக்குமோ அவ்வளவு தித்திப்பைத் தரும். சர்க்கரையையே உபயோகிக்கக்கூடாத மதுமூத்திர ரோகிகளுக்கும், சர்க்கரையை உபயோகிப்பதினால் மதுமூத்திரம் வந்துவிடும் என்று அச்சப்படுகிறவர்களுக்கும், 'சர்க்கரையின்' மிகவும் உபயோகமுள்ள வஸ்து. சர்க்கரையை விட விலை சாசம். சர்க்கரையின் துர்க்குணத்திற்குப் பயந்து அநேகர் சர்க்கரையில்லாமலே காபி, தேயிலை, பாயசம் முதலிய பானங்கள் சாப்பிடுவதுண்டு. அப்பேர்க்கொத்தவர்களுக்கு 'சர்க்கரையின்' உபயோகம் இவ்வளவுதான் என்று கணக்கிட முடியாது. சீசா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

1. தாதுபுஷ்டி மருந்து:— இதன் குணத்தை எழுதி முடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாது நஷ்டம், பலஹீனம், ஆண்குறி துவளல், பசியின்மை, கண் கால் எரிவு, தேக வறட்சி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களையும் போக்கும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, போகசக்தி, ஜீரண சக்தி, அபரிமிதமான தாதுவிருத்தியையும் உண்டாக்கும். நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2. வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,

AYURVEDIC PHARMACY,

Sri Venkatesa Perumal Koil Sannathy,

TANJORE.

21

சிவஞானசித்தியார் சுபக்கம்

மூலமும் பொழிப்புரையும்.

சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்றும், சிவஞான போதத்துக்கு வழி நூலாக ஸ்ரீ அருணந்திசிவாசாரியர் திருவாய் மலர்ந்தருளியதும் ஆகிய சிவஞானசித்தியார் சுபக்கத்துக்கு, திருவாவடுதுறை ஆதீனத்துச் சைவப்பிரசாரகராகிய தூத்துக்குடி ஸ்ரீ பொ. முத்தையபிள்ளையவர்கள், ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள் உரையைத் தழுவி விரித்து விளக்கி யெழுதிய உரைப் புத்தகம் ஒன்று, இப்பொழுது செவ்வையாக அச்சிடப்பெற்றுள்ளது. இவ்வுரை, முன்னையுரையாசிரியர் பலர் அரிதின் விளக்கிய கருத்துக்களையும், வேறு சில விசேடங்களையும் யாவரும் எளிதிலுணர்ந்து கொள்ளுதற்கு மிக உபயோகமாகும்.

ஒவ்வொரு செய்யுட்கும் தனித்தனி அவதாரிகையும், கொண்டு கூட்டும், பொழிப்புரையும், விசேடக்குறிப்பும் இதன்கண் உள்ளன. சைவசம்பந்தமான பல ஆசங்கைகளுக்கு இதன்கண், செவ்வையாகச் சமாதானங்கள் எழுதப்பட்டுள்ளன. விஷய அகராதி முதலியவை விளக்கமாக முன்னர்ச் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

இப்புத்தகம் நயமான கிளேஸ் கடிதத்தில் டெம்மி எட்டுப் பக்கங்கொண்ட 45 பாரத்தில் அச்சிட்டு உயர்ந்த காலிகோ பயிண்டு செய்யப்பெற்றிருக்கிறது. யாவரும் எளிதில் வாங்கிப் படித்தற் பொருட்டுப் புத்தகம் ஒன்றுக்கு ரூ 1—8—0 ஆக விலை யேற்படுத்தியிருக்கிறது. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் அடியிற்கண்டவர்களிடத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

1. பொ. முத்தையபிள்ளை,
திருவாவடுதுறை யாதீனச் சைவப்பிரசாரகர்,
பங்களாத்தெரு, மேலூர், தூத்துக்குடி.

2. மானேஜர், விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை.

இங்ஙனம்

எஸ். குமாரஸ்வாமிப்பிள்ளை.

அல்லது காபி அல்லது தேயிலேக்கு ஒன்று அல்லது இரண்டு பில்லேகள் உபயோகித்தால் ஒருபிடி சர்க்கரையை உபயோகித்தால் எவ்வளவு மதுரமும் இனிப்புமிருக்குமோ அவ்வளவு தித்திப்பைத் தரும். சர்க்கரையையே உபயோகிக்கக்கூடாத மதுமூத்திர ரோகிகளுக்கும், சர்க்கரையை உபயோகிப்பதினுல் மதுமூத்திரம் வந்துவிடும் என்று அச்சப்படுகிறவர்களுக்கும், 'சர்க்கரையின்' மிகவும் உபயோகமுள்ள வஸ்து. சர்க்கரையை விட விலே சரசம். சர்க்கரையின் துர்க்குணத்திற்குப் பயந்து அநேகர் சர்க்கரையில்லாமலே காபி, தேயிலே, பாயசம் முதலிய பானங்கள் சாப்பிடுவதுண்டு. அப்பேர்க்கொத்தவர்களுக்கு 'சர்க்கரையின்' உபயோகம் இவ்வளவுதான் என்று கணக்கிட முடியாது. சீசா 1-க்கு அணு 8. வி. பி. செலவு 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

1. தாதுபுஷ்டி மருந்து:—இதன் குணத்தை எழுதி முடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாது நஷ்டம், பலஹீனம், ஆண்குறி துவளல், பசியின்மை, கண் கால் எரிவு, தேக வறட்சி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளே, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திரரோகங்களேயும் போக்கும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, போகசக்தி, ஜீரணசக்தி, அபரிமிதமான தாதுவிருத்தியையும் உண்டாக்கும். நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலே ரூபா 2. வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,

Ayurvedic Pharmacy,

Sri Venkatesa Perumal Koil Sannathy,

TANJORE.

21

சிவஞானசித்தியார் சுபக்கம்

மூலமும் பொழிப்புரையும்.

சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்றும், சிவஞான போதத்துக்கு வழி நூலாக ஸ்ரீ அருணந்திசிவாசாரியர் திருவாய் மலர்ந்தருளியதும் ஆகிய சிவஞானசித்தியார் சுபக்கத்துக்கு, திருவாவடுதுறை ஆதீனத்துச் சைவப்பிரசாரகராகிய தூத்துக்குடி ஸ்ரீ பொ. முத்தையபிள்ளையவர்கள், ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் உரையைத் தழுவி விரித்து விளக்கி யெழுதிய உரைப் புத்தகம் ஒன்று, இப்பொழுது செவ்வையாக அச்சிடப்பெற்றுள்ளது. இவ்வுரை, முன்னையுரையாசிரியர் பலர் அரிதின் விளக்கிய கருத்துக்களையும், வேறு சில விசேடங்களையும் யாவரும் எளிதினுணர்ந்து கொள்ளுதற்கு மிக உபயோகமாகும்.

ஒவ்வொரு செய்யுட்கும் தனித்தனி அவதாரிகையும், கொண்டு கூட்டும், பொழிப்புரையும், விசேடக்குறிப்பும் இதன்கண் உள்ளன. சைவசம்பந்தமான பல ஆசங்கைகளுக்கு இதன்கண், செவ்வையாகச் சமாதானங்கள் எழுதப்பட்டுள்ளன. விஷய அகராதி முதலியவை விளக்கமாக முன்னர்ச் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

இப்புத்தகம் நயமான கிளேஸ் கடிதத்தில் டிம்மி எட்டுப் பக்கங்கொண்ட 45 பாரத்தில் அச்சிட்டு உயர்ந்த காலிகோ பயிண்டு செய்யப்பெற்றிருக்கிறது. யாவரும் எளிதில் வாங்கிப் படித்தற் பொருட்டுப் புத்தகம் ஒன்றுக்கு ரூ 1—8—0 ஆக விலை யேற்படுத்தியிருக்கிறது. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் அடியிற்கண்டவர்களிடத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

1. பொ. முத்தையபிள்ளை,
திருவாவடுதுறை யாதீனச் சைவப்பிரசாரகர்,
பங்களாத்தெரு, மேலூர், தூத்துக்குடி.

2. மானேஜர், விவேகபானு அச்சியந்திரசாலை, மதுரை.

இங்ஙனம்

எஸ். குமாரஸ்வாமிப்பிள்ளை.

22

தலைமயிர் நரைத்து, ஏன் கிழவர்களைப்போல் காணப்படுகிறீர்கள் ?

☞ எங்கள் **தர்பார் கேசகலாபத்தை**

ஒருதரம் உபயோகிப்பதனால் எந்தக் காரணத்தினால் உண்டான நரைத்த கூந்தலைக் கருக்கச் செய்யும். இது கிழத்தனத்தைப் போக்கடித்து யௌவனத்தையும், கூந்தலுக்குப் பலஹீனத்தைப் போக்கடித்து அவைகளுக்குப் பலத்தையும் கொடுக்கும். சர்மத்துக்கு எவ்வித தொந்தரவில்லாமல் அதி அற்புதமாய் வேலைசெய்யும். ஒரு தடவை தருவித்துப் பார்த்தால் நம்பிக்கை தெரியும்.

புட்டி விலை புருஷ் உடன் ரூ. 1 — 0 — 0
போஸ்டேஜ் பிரத்தியேகம் 0 — 4 — 0

புதிதாய்க் கண்டுபிடித்த ரோமசங்காரிணி என்னும்

தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்தப் பாகத்திலும் இருக்கும் ரோமத்தில் பூசுவதனால் தேகத்தின் சர்மத்திற்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியும் முன்போலவே நிற்கும். சுபாவமான நிறத்தைக் காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றைத் தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை.

வர்த்தகர்களுக்குச் சகாயமாய்க் கொடுக்கப்படும்.
ஏஜெண்டுகள் தேவை.

3 கேசு உள்ள பெட்டி 1-க்கு 0 — 14 — 0
ஒரே தடவையில் 2 பெட்டிக்கு 1 — 10 — 0

வி. ஏ. எஸ். பாணி,
நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

சந்திரசேகரன் சரித்திரம்.

இஃது ஓர் மகானுபாவனுல் எழுதப்பட்ட "திரிகால மாயப் பிரசன்ன நவீனம்" என்ற புத்தக வரிசையில் முதலாவது புத்தகம். இப் புத்தகம் இடைகிடையே சந்தர்ப்பத்திற் கேற்ற வர்ணமெட்டுகளமைந்த பல இசைப்பாட்டுகளுடன் கல்விமான்களால் ஒரு கற்பனை நாடகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இக் கதை படிக்கப் படிக்க இன்பந் தருவதுமன்றி, ஆண்மக்களும் பெண்மக்களும் உலகத்தில் அறிந்து நடக்கவேண்டிய நீதி பலவற்றைக் கற்பிக்கும் ஓர் உத்தம ஆசிரியன் போன்றும் விளங்குவது. எந்த மதத்தினர்களும், ஆண் பெண் சிறுவர் முதலிய யாவர்களும் படித்துப் பயனடையும்படி மிக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. பலவிதமாகச் சொல்வதிற் பயனென்னை? உண்மையில் இப் புத்தகம் படிப்பவர்களுக்கே இதன் இன்பம் விளங்கும்.

புத்தகம் நல்ல கிளேஸ் கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களால் மிக அழகாக அச்சிட்டு பயிண்டு செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இதன் விலை அண 6.

ஜெகசேகர சத்தியவதனி.

மேற்கூறியதுபோலவே இதுவும் "பஞ்சாஸம்" என்ற புத்தக வரிசையில் முதலாவது ரஸமாகிய ஒரு நாவல். இப் புத்தகம் மார்ச் மாதத்தில் வெளிவரும். இதன் விலை அண 12.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி முற்பண மனுப்பியேனும், வி. பி. மூலமாகவேனும் பெற்றுக் கொள்ளலாம்.

பொன். நல்லத்தம்பிமுதலியார்

No. 34. ஆநந்தரங்கப்பிள்ளை வீதி,

புதுச்சேரி.

24

சோதிட விளம்பரம்.

ஆரிய நேயர்காள்!

தங்கட்கு ஜாதகங்களின் குறிப்பெழுத வேண்டினும், (அல்லது) பலனெழுத வேண்டினும், ஆலயம், மனை முதலியவை களுக்குப் பொருத்தபலன் எடுத்தெழுத வேண்டினும், புத்திர தோஷ நிவர்த்திக்கு (கர்மநாடிப்படி) தோஷநிவர்த்தி சாந்தி விதிகள் எடுத்தெழுத வேண்டினும், (அல்லது) நஷ்டஜாதகம் கணித்துப் பலனெழுத வேண்டினும் அடியிற் குறித்த விடத்திற் கெழுதி விபரம் தெரிந்துகொள்ளலாம். விபரம் அறிய விரும்பு வோர் ரிப்ளை கார்டு அல்லது ½ அணு லேபிள் அனுப்பவேண்டும்.

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி, ஜோதிஷர்,

ஆரியன் சோதிடசாலைத்தலைவர், திருவாரூர்.

நற்சாக்ஷிப் பத்திரம்.

திருவாரூர்:— ஆரியன் சோதிடசாலைத்தலைவர்

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி ஜோதிஷரவர்களுக்கு.

ஐயா! தாங்கள் எடுத்துக் காட்டிய சாஸ்திர நியாயம் எல்லாம் சரியானதே. எனக்கு வரவர உடம்பு மிகவும் சௌக்கியமாயிருக் கின்றது. தாங்கள் எனக்குச் சொல்லிவரும் சோதிடபலன்கள் எல்லாம் சரிவர ஒத்திருக்கின்றன.

இங்ஙனம் தங்கள்

* **V. தங்கவேலுசாமித்தேவர்**, வித்வான் மாப்பிள்ளை,

23 — 4 — 912 கந்த விலாசம், இராமநாதபுரம்.

* ஸ்ரீமத் பாஸ்கரசேதுபதி மகாராஜாவின் அருமை மைத்துனர்.

திருவள்ளுவர் மடாலய சாதுமகாசங்கம்.

இச் சங்கம் ஆனந்த ஞு சித்திரை மீ 24-ம் வ புதன் கிழமை ஸ்ரீதியாகேசன் சந்நிதியில் எம்மால் ஏற்படுத்தப்பெற்றது.

இச் சங்கத்தின் நோக்கமாவன:— ஸ்ரீ தியாகேசன் திரு விழாக்காலத்தில் (பங்குனிமாதத்தில்) சுமார் 1000 அடியார்க ளுக்கு அன்னம் அருத்தலும் தாகநீர் அளித்துத் தாகசாந்தி செய் வித்தலுமாம்.

முக்கிய வேண்டுகோள்:— இதனைக்கண்ணுறும் புண்ணிய சீலர்கள் ஷை தர்மத்திற்குதவும் பொருளுதவியை எமக்குத் தபால் மூலமாய் முன்னடியே அனுப்பி உபகரிக்கக்கோருகிறேன்.

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி, ஜோதிஷர்,

23-1-15 சாதுமகாசங்கத்தலைவர், திருவாரூர்.

ஸ்ரீலஸ்ரீ, சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

ஞானியார் மடாலயம், திருப்பாதிரிப்புலியூர்.